புகார் இருக்கிறது. எத்தனை சதவிகிதம் எந்த உரங்களைக் கலந்து போடவேண்டுமோ அப்படிப்பட்ட வகையிலே உழவர்கள் முழு அளவையையும் போடவில்லை, அதனால் தான் அதிகப்படியான விளைச்சல் காணவேண்டியிருந்தாலும், போதுமான உரம் சொல்லிக் கொடுக்கிற அளவுக்குப் போடாத காரணத்தினால், இன்னும் விளைச்சல் குறைவாக இருக்கிறது என்பதை அதிகாரிகள் அவ்வப்பொழுது அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொண்டு வருகிறார்கள்.

உணவுப் பொருள் வழங்குத்துறை

***256 வினா—திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், உணவு, தானிய மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தக்கூடிய செயற்குறிப்பு ஏதாவது தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா என்பது. அதற்கு இல்லை என்று பதில் சொன்னேன். மூலக்கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

***257. Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR :** Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether most of the staff of the Accountant General's Office working at the Office of the Commissioner of Civil Supplies have been withdrawn; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் அலுவலகத்தில் (கணக்குப்பிரிவில்) தமிழ்நாடு கணக்காய்வாளர் அலுவலகப் பணியாளர்களில் சிலர் முகமை அடிப்படையில் பணியாற்றி வந்தனர். அவர்கள் பதவிக்காலம் முடிந்தபின் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார். அகௌண்டெண்டு ஜெனரல் ஆபீசிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த சிப்பந்திகள் குறிப்பிட்ட காலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் என்ற ஒரு நியதியில் எடுத்துக்கொள்ளப்பட்டார்களா ? இல்லை, அவர்கள் இந்த டிபார்ட்மெண்டு இருக்கிற வரைக்கும் வேலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்பட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.